**சுருக்கம்**

பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை - திருமதி சி.சுப்புலட்சுமி, உதவி ஆய்வர், 15.07.1997 அன்று பணியிடை மரணம் - அவரது மகள் செல்வி.சு.சிவரஞ்சினி, தற்காலிக இளநிலை உதவியாளர் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது - பணி வரன்முறை - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை**

அரசாணை (நிலை) எண். 19 நாள் 12.01.2021

சார்வரி, மார்கழி - 28

திருவள்ளுவர் ஆண்டு - 2051

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.93, நிதி(உ.நி)த் துறை, நாள் 23.03.2018.
2. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க.எண். ப & நி II (7) / 20188 / 2016, நாள் 2.7.2018.
3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண். ப & நி II (7) / 20188 / 2016, நாள் 29.08.2020 & 21.10.2020.
4. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ-1)த் துறை, நாள் 23.01.2020.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தூத்துக்குடி உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரியும் போது 15.07.1997 அன்று பணியிடை காலமான திருமதி.சு.சுப்புலட்சுமி என்பவரின் வாரிசுதாரர் செல்வி.சு.சிவரஞ்சினி என்பவரை கருணை அடிப்படையில் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்திட உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு அனுமதியளித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் செல்வி.சு.சிவரஞ்சினி, கருணை அடிப்படையில், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் திருநெல்வேலி மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணியமர்த்தி ஆணையிடப்பட்டது.

3. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், மாநில அரசு தணிக்கைத் துறை, தூத்துக்குடி, உதவி இயக்குநர் அலுவலகத்தில் உதவி ஆய்வராகப் பணிபுரியும்போது 15.07.1997 அன்று காலமான திருமதி.சி.சுப்புலட்சுமி, என்பவருடைய மகள் செல்வி.சு.சிவரஞ்சினி, என்பவரை, இளநிலை உதவியாளராக கருணை அடிப்படையில் திருநெல்வேலி, உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் 04.07.2018

முற்பகல் முதல் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வழி பணியமர்த்தப்பட்டதாகத் தெரிவித்து, தனியரது பணியினை அவர் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 04.07.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வெளியிடுமாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. செல்வி.சு.சிவரஞ்சினி, இளநிலை உதவியாளர், 3.11.1994-ல் பிறந்துள்ளார். தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான குறைந்த பட்ச கல்வித் தகுதியான 10-ஆம் வகுப்பு தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார். கருணை அடிப்படையில் பணிநியமனம் தொடர்பான அனைத்து விதிகள் / நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார்.

5. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் திருநெல்வேலி, உள்ளாட்சி நிதித் தணிக்கை, மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில், தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் செல்வி.சு.சிவரஞ்சினி என்பவரின் பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 04.07.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடுகிறது. இதனால் எழக்கூடிய நிலுவைப் பணப்பயன்களை பெறத் தனியர் தகுதியுடையவர் ஆகிறார்.

6. இவ்வாணை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.எண். 21612/க்யூ.1/2020-1, நாள் 30.12.2020 மற்றும் பணியாளர் (ம) நிருவாக சீர்திருத்தத் துறையின் அ.சா.எண். 90/ஜி2/2020, நாள் 08.01.2021 ஒப்புதல்களுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை-35
செல்வி. சு. சிவரஞ்சினி, இளநிலை உதவியாளர், (அனைத்து மூலச்சான்றுகளுடன்)
இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை-35. (வழியாக)
மண்டல இணை இயக்குநர் அலுவலகம், உள்ளாட்சி நிதி தணிக்கை, திருநெல்வேலி.

நகல்:
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யு1)த் துறை, சென்னை-9.
பணியளார் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம் (ஜி2) துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/01/2021
பிரிவு அலுவலர்.
12/1/2021